முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1059

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.08.2022, செவ்வாய்கிழமை

1. பேருலகை காக்க வந்த ஞானியே
பிரணவக்குடில் படைத்த தவசியே
மாறுதலை உலகில் செய்வேன் என்று
மகத்துவம் கூட்டி அருளுகின்ற குருராஜனே அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 07 நாள், 23.08.2022 செவ்வாய்கிழமை)
வகைபட அரங்கன் கொள்கை மூலமே
வையகம் ஏற்றம் காணக்கூடும்
3. தாழ்விலா அரங்கன் அருளமுது வழியே
தரணியோர் மேல்நிலை மிகுதி கண்டு
கண்டுமே ஞானவான்கள் என்பதோடு
கலியுகத்தை மீட்க வல்ல தர்மவான்களாகவும் சிறந்து
4. இனிதே இந்த உலகில்
அற்புதம் காணக் கூடும்
காணவே அரங்கனே அறுபத்து மூவரின் ஆசி பெற்ற ஞானி
அரங்கனே ஆழ்வார் பெருமக்களின் ஆசிக்குரிய ஞானி
5. வரமென அரங்கனைச் சுற்றி காப்பு வேலி
வடிவேலன் யான் இட்டிருக்க
முருகா என அரங்கனை வேண்டி
முழுமை ஞானம் கருதிவரும் மக்களெல்லாம்
6. வரம் பல பெற்று இனிதே வையகத்தை
வலுபடுத்தும் காக்கும் சக்திகளாகி
ஆகியே உலகமாற்றம் எனும் அற்புதத்தை
அரங்கனைக்கொண்டு நடத்தக் கூடும்
7. மகிழவே அரங்கன் மார்க்கமே உலகை
மாண்புள சன்மார்க்க வழிகளாக தேற்றி
தேற்றியே  உலகை மீட்பது உறுதி
தேசிகனால் இந்த அற்புதம் நடப்பது சடுதிசடுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–